ஊராட்சி மன்றத் தலைவர், வையாவூர் ஊராட்சி
வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை - திருமதி. N.ஜெயலட்சுமி.,

ந.க.எண்.016/2023 நாள்20.10.2023

பொருள் - அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் - வையாவூர் ஊராட்சி நல்லூர் கிராமம் - சர்வே எண்.37/1B2-ல் மொத்த விஸ்தீரணம் **0.39.80** ஹெக்டேர் (அ) **3980** ச.மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு வீட்டு மனைபிரிவு (Lay Out) வரைபடத்திற்கு **SWP/DTCP/KANCHIPURAM-LAYOUT NO: 138/2022** என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளித்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது - மேற்படி மனைபிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 25 வீட்டு மனைகள் விற்பனை செய்ய வையாவூர் கிராம ஊராட்சியின் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடுதல்.

பார்வை -
1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண்.R8SG71KV/2022/TCP நாள்.30.12.2022
2. வையாவூர் ஊராட்சி மன்ற தீர்மானம் எண். நாள். .06.2023
3. Tmt.K.Vijayalakshmi, A.P.H.No.8, 12th Street, Anna Nagar, Western Ext., Chennai.

******

உத்தரவு :-

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், வையாவூர் ஊராட்சி நல்லூர் கிராமம், சர்வே எண்.37/1B2-ல் மொத்த விஸ்தீரணம் **0.39.80** ஹெக்டேர் (அ) **3980** ச.மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கான சாலைகள், பொது உபயோகம் மற்றும் மூலை முடுக்குகள் பார்வை 1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தின் வாயிலாக பெறப்பட்ட சாலை அமைப்பு Blue Print-ல் வரைபடத்தில் தெரிவித்துள்ளபடி, **பொது உபயோகம், சாலைகள், மூலை முடுக்குகள் மற்றும் தமிழ்நாடுமின்சார வாரிய ஒழுங்கு முறை ஆணையத்திற்கும், வையாவூர் கிராம ஊராட்சியின் பெயரில் பத்திரபதிவு** செய்யப்பட்டு தான பத்திரம் எண்.4599/2022நாள்.02.12.2022-ன்படி பெறப்பட்டுள்ளது.

மேற்படி அதனைதொடர்ந்து பார்வை1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தில் தொழில் நுட்ப ஒப்புதல் (Technical Santion) வழங்கப்பட்ட இம்மனைபிரிவு வரைபடத்திற்கு **SWP/DTCP/KANCHIPURAM-LAYOUT NO: 138/2022** என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கபட்டுள்ளதாலும், கிராம ஊராட்சி வளர்ச்சி கட்டணம் பெறப்பட்டுள்ளதாலும், பெயரிடப்படாத மனைப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள **25** வீட்டு மனைகள் விற்பனை செய்ய கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வையாவூர் கிராம ஊராட்சியின் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

//நிபந்தனைகள்//

- நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என கண்டறியபட்டால் (அ) மனைபிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் ரத்து செய்யப்படும்.

- சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், மனுதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய கிராம ஊராட்சி பொருத்தமான அமைப்பு அல்ல.

- நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

- மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண்.R8SG71KV/2022/TCP நாள்.30.12.2022-ன்படி செயல்முறை கடிதத்தில் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது மனுதாரர் பின்பற்ற வேண்டும்.

- ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட திறந்தவெளி ஒதுக்கீட்டு இடம் (OSR) மனைப்பிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தால் அவர்கள் மீது குற்றிவியல் நடவடிக்கை தொடரப்படுவதோடு நிலத்தை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

- 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

- இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

- தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 6அடி X 4அடி அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

ஊராட்சி மன்றத் தலைவர்
வையாவூர் ஊராட்சி
வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்

Tmt.K.Vijayalakshmi,
A.P.H.No.8, 12th Street,
Anna Nagar, Western Ext.,
Chennai.

நகல் - நகர் ஊரமைப்பு இயக்குநர், காஞ்சிபுரம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் - இணை சார்பதிவாளர் (எண்.1) காஞ்சிபுரம் அவர்களுக்கு மனைகள் பத்திர பதிவு செய்யும் பொருட்டு அனுப்பப்படுகிறது.

தீர்மான நகல்

வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், வையாவூர் ஊராட்சியில் 20.10.2023 தேதியன்று புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.N.ஜெயலட்சுமி அவர்களின் தலைமையில் ஊராட்சி மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் விவரம் பின்வருமாறு

பொருள் எண். 18

வையாவூர் ஊராட்சி நல்லூர் கிராமம், சர்வே எண். 37/1B2-ல் மொத்த விஸ்தீரணம் **0.39.80** ஹெக்டேர் (அ) **3980** ச.மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு வீட்டு மனைப்பிரிவில் (Layout) உள்ளடங்கிய அனைத்து சாலைகள், மூலை முடுக்குகள் வரைபடத்திற்கு தொழில் நுட்ப அனுமதி (Techical Sanction) மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/ உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண்.R8SG71KV/2022/TCP நாள்.30.12.2022 நாளிட்ட கடிதத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட Blue Print வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொது உபயோகம், சாலைகள், மூலை முடுக்குகள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரிய ஒழுங்குமுறை ஆணையம் ஆகியன வையாவூர் ஊராட்சியின் பெயரில் பத்திர பதிவு செய்யப்பட்டு தான பத்திரம் எண். 4599/2022 நாள்.02.12.2022-ன்படி பெறப்பட்டதன் அடிப்படையிலும், பெயரிடப்படாத வீட்டு மனைப்பிரிவில் அமைந்துள்ள 25 மனைகளுக்கு ஊராட்சி மன்றம் ஒப்புதல் வழங்க கோருதல்.

தீர்மானம் எண். 18

வையாவூர் ஊராட்சி நல்லூர் கிராமம், சர்வே எண். 37/1B2-ல் மொத்த விஸ்தீரணம் **0.39.80** ஹெக்டேர் (அ) **3980** ச.மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள பெயரிடப்படாத உத்தேச வீட்டு மனைப்பிரிவில் அமைந்துள்ள 25 மனைகளை விற்பனை செய்திட இறுதி ஒப்புதல் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

ஊராட்சி மன்றத் தலைவர்
வையாவூர் ஊராட்சி
வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம்.